THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we read in the newspapers that the Central Government are of opinion that additional Primary Health Centres could be granted to each Block. May I know whether it is in the proposal stage or finalised?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, most of the suggestions that appear in the newspapers are only under consideration. I hope the Central Government may at least formulate certain principles in order to have second Primary Health Centres or additional Health Service in the Panchayat Union areas in the next Five-Year Plan.

புலவர் சி. பழனிசாமி : பழனித் தொகுதியில் பாப்பம்பட்டி சிற்றூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டி ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் ஆகிய இருவர் பணியாற்றுகிறார்கள். ஆனால், 20,000 மக்கள் தொகை கொண்ட மேஜர் பஞ்சாயத்தான ஆயக்குடியில் அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரே ஒரு ஆண் மருத்துவர் மட்டும் தான் பணியாற்றி வருகிறார். பெண் மருத்துவர் அங்கே இல்லை. அதிக மக்கள் நோயாளிகள் வருகிற அந்த இடத்தில் பெண் டாக்டர் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் துணைக் கேள்வி மூலக்கேள்வியோடு தொடர்பற்ற கேள்வி. இருந்தாலும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தரப்படுகின்ற மருத்துவமனை எங்கே இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது அந்த ஒன்றியத்தினுடைய உரிமையாகும். மற்ற மேஜர் பஞ்சாயத்துகளில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளைப்பற்றி, அவைகளை வளர்ப்பது பற்றி அரசாங்கம் தனித்தனியாகவே பரிசீலிக்கும்.

*88 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal to construct a building for the Primary Health Centre at Kelamangalam in Denkanikota taluk, Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கேளமங்கலத்தில் 1972-73-ம் ஆண்டில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும், பணியாளர் குடியிருப்பில்லங்களுக்கும் கட்டடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் விவரம் வேண்டுமானால், அவர்கள் இன்னும் அந்த மருத்துவமனைக்காக கட்ட வேண்டிய ரூ. 10,000 முன்பணம் அது இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேராத காரணத்தினால், கட்டடம் கட்டுகின்ற வேலை இன்னும் தொடங்கப்படவில்லை.

[1972 டிசம்பர் 8]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir villages of Kelamangalam have purchased about 5 acres of land which is very costly and they have also registered a document in favour of the Primary Health Centre there. It is an important place and so may I know whether priority will be given for the construction of the health centre there?

THE HON. THIRU K. ANBAZHAGAN: There is a condition that at least a deposit of Rs. 10,000 should come forth from the panchayat union and they have intimated their willingness to the Secretary, R.D. and L.A. Department but it has not yet materialised.

திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது, எதிர்காலத்தில் ஒரு ஒன்றியத்தில் இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டப்படலாம் என்று அரசின் யோசனையாகச் சொன்னார்கள். எதிர் காலத்தில் தமிழகத்தில் ஒன்றியங்களின் கணக்கை எடுத்து, எந்தெந்த ஒன்றி யங்களில் அதிகமாக மக்கள் தொகை இருக்கிறதோ அந்த ஒன்றியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப் பதற்கு தம்முடைய அரசு திட்டம் வகுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழக அரசாங்கம் செய்யக்கூடிய ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள ஒன்றியங்கள் ஏறத்தாழ 50, 60 ஒன்றியங்கள் இருக்கக்கூடும். அவைகளுக்கு முதல் உரிமை கொடுத்து, பிறகு 90,000 மக்கள் தொகை இருக்கும் ஒன்றியங் களுக்கு அடுத்த இடம் கொடுத்து, இப்படி படிப்படியாக அதிக மக்கள் உள்ள இடங்களுக்கு முதல் வாய்ப்பு அளிக்கின்ற ஒரு முறை மேற்கொள்ளப்படும்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, பெரும்பாலும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை தமிழ்நாடு முழுவதும் இருந்து வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலையில் ஒவ்வொரு யூனியனிலும் குறைந்தது ஒரு யூனியன் மு 9—
டிஸ்பென்சரியாவது ஏற்படுத்துவதற்கு நிதி வசதியில்லாத பஞ்சாயத்து ஒன்றி யங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முயற்சி யெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டு இருப் பதே ஜனநாயகத்திலே பொதுமக்கள் தங்களுடைய நன்மைக்காக தாங்களே பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலேதான். ஒன்றியங்கள் மட்டும் இருக்கும், ஆனால் வருமானம் இல்லாத நிலை இருக்கும் என்று

சொன்னுல் உண்மையிலேயே ஒன்றியங்களின் குறிக்கோளே நிறைவேற்றப்பட முடியாத நிலே ஏற்பட்டுவிடும். ஒன்றியங்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளே எடுத்துக் கொள்ளுமேயானுல் ஆங்காங்கே தனி மருத்துவ மனேகள் ஏற்படுத்த அரசாங்கம் உதவித் தொகை வழங்க ஆர்வமாக இருக்கும்.

டாக்டர் ச. அ. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மலேப்பாங்கான பிரதேசங்கள் பின்தங்கிய நிலேயில் இருக் கின்றன, அப்படிப்பட்ட பிரதேசங்களிலாவது இரண்டு மருத்துவ மனேகள் ஆரம்பச் சுகாதார நிலேயங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பின் தங்கிய வட்டாரங்கள் என்பது பல்வேறு கணக்கெடுப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வெவ்வேறன நிலேயை யொட்டி பிற்பட்ட பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்திலே தொழுநோய் அதிகமாகப் பரவியிருக்கலாம். ஒரு மாவட்டத்திலே காச நோய் அதிகமாக இருக்கலாம், ஒரு மாவட்டத்திலே மலேரியா காய்ச்சல் அதிகமாக இருக்கலாம் ; தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு அதிகம் பேர்கள் இருக்கிறர்கள். வெளிநாட்டினரின் உதவியோடு அந்த மாவட்டத்தில் தொழுநோய்த் தடுப்புக்கு—தடுப்பு என்றல் அந்த நோய் வாராமல் முன் கூட்டித் தடுப்பது அல்ல, வந்த நிலேயில் சிகிச்சை யளிக்கின்ற நிலே—சிகிச்சைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சக்தி குழாய் நிறுவன தொழிலாளர்களுக்கு சுட்டுறுதித் திட்டம்

*89. **வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எளாவூர் சக்தி குழாய்த் தொழிற்சாலேத் தொழிலாளர்களுக்கு இ.எல்.ஐ. மருத்துவ வசதித் திட்டம் நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எளாவூர் சக்தி குழாய்த் தொழிற் சாலேத் தொழிலாளர்களுக்கு இ.எல்.ஐ. மருத்துவ வசதித் திட்டத்தை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருந்தது. அச் செயற்குறிப்பை அரசு மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருடன் கலந்து பரிசிலனே செய்தபின் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அதனே தற்போது நிறைவேற்ற இயலாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) எளாவூரில் சக்தி குழாய்த் தொழிற்சாலே மட்டுமே உள்ளது ; அதனேத் தவிர, எளாவூரின் அருகாமையில் சுற்றுப்புறத்தில் வேறு எந்த தொழிற்சாலேகளும் இல்லே ;